பழுதடைந்திருக்கும் கட்டடத்தை உடனடியாக மதிப்பீடு செய்து அதை இந்த ஆண்டே கட்டுவதற்கு உறுதியளித்ததற்கும் நன்றியை கூறிக்கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்பொழுது புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. அப்படிப் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்கிறபொழுது நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 146, திரு. கே.என். சேகரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்.

146—

மருத்துவமனை

•18748—திரு. கே.என். சேகரன்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி-தஞ்சாவூர் தேசிய நெடுஞ்சாலையில் துவாக்குடி, திருவெறும்பூர் பகுதிகளில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஏதேனும் ஒன்றை 30 படுக்கைகள் கொண்ட நவீன மருத்துவ வசதிகள் கொண்ட மருத்துவமனையாக மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள எட்டு ஆரம்ப சுகாதார நிலையங்களில் தகுதி உள்ள ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசு முடிவு எடுத்துள்ளது. துவாக்குடி மற்றும் திருவெறும்பூர் ஆகிய இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களில் எந்த ஆரம்ப சுகாதார நிலையம்

3 - ஜூலை 2007

-600 009

மேம்படுத்தப்படத் தகுதியுள்ளதோ அதில் ஒன்றை உரிய நேரத்தில் பரிசீலித்து அந்த ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்படும்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.என். சேகரன், இருக்கையில் இல்லை.

வினா 147, திரு. கேசி. கருப்பண்ணன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

147-

பூச்சிக் கொல்லி மருந்து

***27649—திரு. கே.சி. கருப்பணன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

போலி பூச்சிக் கொல்லி மருந்துகள் அதிகமாக விற்பனையில் உள்ளதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பூச்சி மருந்து சட்டம், 1968, மற்றும் அதன்கீழ் வரும் பூச்சி மருந்து விதிகள் 1971, விதிகளின் கீழ் தரமற்ற/போலி பூச்சி மருந்து தயாரிப்பாளர்கள்/விநியோகஸ்தர்கள்/விற்பனையாளர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, தரமான பூச்சி மருந்துகள் மட்டும் விவசாயிகளுக்குக் கிடைக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. கே.சி. கருப்பணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக பூச்சி மருந்துகள் என்று சொல்லப்போனால், நுவாக்கிரான், மோனோகுரோடோபாஸ், டைத்தேன் எம் 45, பவிஸ்டின் போன்ற விலையுயர்ந்த மருந்துகளில்தான் அதிகமாகப் போலி மருந்துகள் வருகின்றன. இது அரசுக்குத் தெரியுமா? இதைக் கண்டுபிடித்து சென்ற ஆண்டு எத்தனை நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை அரசு அறிவிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS